பெரிய தபாற் கந்தோரில் புதினப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

10 OCT 1963

# ஸ்ரீ லங்கா

தகவற்பகுதியின் வாராந்தப் பத்திரிகை.

மலர்: 7 | 1963, செத்தெம்பர் 18ந் திகதி | இதழ்: 26

# மீன் விலையைக் குறைக்க ஏற்பாடு

கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் நாள் ஒன்றுக்கு சராசரி 30—35 தொன் மீன் புசிக்கப்படுகிறது. தற்போது இவ்வளவையும் தனிப்பட்ட மீன் முதலாளிமார்களே விநியோகிக்கின்றனர். இலங்கைக் கூட்டுறவு மீன் விற்பனைச் சங்கம் இதில் 3—4 தொன் மீனை விநியோகிக்கிறது.

விநியோகத் தட்டுப்பாடும், உள்நாட்டு மீன் தேவையைப் பூர்த்திசெய்யக்கூடிய வகையில் உள்நாட்டு உற்பத்தி இல்லாதிருப்பதுமே மீன் விலை அதிகமாக இருப்பதற்கு முக்கிய காரணம். இந் நாட்டின் கரையோரங்களிலிருந்து 20 மைல் தூரத்துக்கு உட்பட்ட கடலில் உள்ள மீன்கள் தற்போதுள்ள படகுகள், யந்திரப்படகுகள் முதலானவற்றின் துணையுடன் பூரணமாகப் பிடிக்கப்படுவதாக மீன்பிடி நிபுணர்கள் கருத்துத் தெரிவித்துள்ளார்கள். கரையோரங்களில், மீன்பிடிப்பதற்காக மேலும் யந்திரப் படகுகளைப் பெருக்கினால் மீன் வளமே குறையும் என நிபுணர்கள் கருதுகின்றனர். வட்கே, பீட்ரோ என இரண்டு அறிந்த மீன்பிடி கரைகள் உள்ளன. வட்கே கரையில் தற்போது அரசாங்கத்தின் இரண்டு மீன்பிடி கப்பல்கள் மீன் பிடிப்பதில் ஈடுபடுகின்றன. இன்னும் 5 மீன் பிடிக்கப்பல்கள் யூகோஸ்லாவியாவில் கட்டப்பட்டு வருகின்றன. இந்த எழு மீன்பிடிக் கப்பல்களும் எதிர்கால மீன் வளத்தைப் பாதிக்காது வட்கே கரையில் திறம்பட மீன்பிடிப்பதற்குப் போதுமானது என நிபுணர்கள் கருதுகிறார்கள். பீட்ரோ கரையில் வட இலங்கை மீனவர்களே ஈடுபட்டுள்ளனர்.

பீட்ரோ கரையில் 50 தொன் மீன்பிடி கப்பல்களில் நான்கை விரைவில் பயன்படுத்துவதற்கு அரசாங்கம் உத்தேசித்துள்ளது. ஆழக்கடல் மீன்பிடிப்பு, இந்து மகா சமுத்திரத்தில் முக்கியமாக பாலை மீன்பிடித்தல், உள்நாட்டில் மீன் பண்ணைகளை எற்படுத்துதல் முதலானவற்றின் மூலம் மீன் பிடிப்பை அபிவிருத்தி செய்யலாம்.

காலி மீன்பிடித்துறைமுகம் நிர்மாணிக்கப்பட்டுவருகிறது. தூண்டிற் படகுகள் தகரத்தில் மீன் அடைக்கும் தொழிற்சாலை முதலியனவும் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் வருகின்றன.

உள்நாட்டு மீன் பண்ணைகளும் துரிதமாக அபிவிருத்தி செய்யப்பட்டுவருகின்றன.

பொது மக்களுக்கு மீன் மலிவான விலையில் கிடைக்கச் செய்வதே உடனடிப் பிரச்னையாக உள்ளது. இதற்கு மீன் விநியோகம் அதிகரித்தாக வேண்டும். அமைச்சர் திரு. சீ. பீ. டி சில்வா பணித்துள்ளவாறு, மீன்பிடி இலாக்கா அதிபர், பாகிஸ்தான், இந்தியா, அங்கோலா ஆகிய நாடுகளிடமிருந்து மாதாந்தம், சுமார் 90 தொன் மீன் பெறுவதற்குக் கேள்விப் பத்திரம் கோரியுள்ளார். இவ்வருடம் செப்ரெம்பர் மாத முடிவிலிருந்து இவ் விநியோகம் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அரசாங்க மீன்பிடி கப்பல்கள் பிடிக்கும் மீன்களை கூட்டுறவு மீன் விற்பனைச் சங்கமே விநியோகித்து வருகிறது. அரசாங்க வைத்தியசாலைகளுக்கும், சந்தைப் படுத்தற் பகுதிக்கும் கொடுத்து மிகுதியாகும் மீன் கொழும்பு முனிசிபல் பகுதியில் 23 இடங்களிலும், சுற்றுப் புறங்களில் 9, இடங்களிலும், விற்பனைக்கு வைக்கப்படுகின்றன. பின்வரும் மீன்களின் விலைகள் வருமாறு :—

| | | | |
|---|---|---|---|
| அறக்குளா | ரூ. 2.50 | ருத் | ஒன்று. |
| பாரை | ரூ. 1.30. | ருத். | ஒன்று. |
| விளைமீன் | ரூ. 1.10. | ருத். | ஒன்று. |
| பாலை | ரூ. 1.15. | ருத். | ஒன்று. |

இந்த விற்பனை இடங்கள் ஒரு விதத்தில் விலைக்கட்டுப்பாடு ஸ்தலங்களாகவும் விளங்குகின்றன.

# கல்விக் கொமிஷன் அறிக்கை

அடுத்த நிதியாண்டின் போது கல்விக்காக ஒதுக்கப்படும் பணம் அரசாங்கத்தால் கணிசமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. 1962/63 ல் கல்விக்காக ரூபா 306,171,548 ஒதுக்கப்பட்டது. 1963/64 ஆம் நிதியாண்டுக்கு இத்தொகை ரூபா 311,146,244 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

புதிய பாடசாலைக் கட்டடங்களையும் ஆசிரிய கலாசாலைகளையும் நிர்மாணிப்பதற்கும் தற்போதுள்ள கட்டடங்களை நன்னிலைப்படுத்துதற்குமாக ஏறத்தாள 1 கோடியே 60 லட்சம் ரூபா இத்தொகையில் ஒதுக்கப்பட்டுள்ளது. அத்துடன் விஞ்ஞான ஆய்கூடங்களுக்கு 10 லட்சம் ரூபாவும் விவசாய விஞ்ஞான கூறுகளுக்கு 250,000 ரூபாவும் பாடசாலை வேலைக்களங்களுக்கு 750,000 ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளன. பல்கலைக் கழக மான்யம்கூட அடுத்த வருடத்துக்கு ஏறத்தாள 30 லட்ச ரூபா மேலதிகமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

தொழில் நுட்பக்கல்விக்கு 2,695,343 ரூபாவும் கலாச்சார விவகாரங்களுக்கு 1,909,667 ரூபாவும் அரசாங்கம் வழங்கியிருக்கிறது.

கல்விப் பகுதியின் சம்பளத்தொகையும் அதிகரிக்கப்பட்டுள்ளது. 1962/63 ல் 83,748,801 ரூபாவாகவிருந்த இத்தொகை 1963/64 ல் 124,600,000 ரூபா அதிகரிக்கப்பட்டுள்ளது. அடுத்த நிதியாண்டின் போது திரட்டுவதற்கு இப்பகுதி உத்தேசித்திருக்கும் 10,000 புதிய மாணவ ஆசிரியர்களுக்கு சம்பளம் வழங்கப்பட விருப்பதே சம்பளத் தொகை அதிகரிப்புக்கு மூலகாரணமாகும் புதிய ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சையொன்றை இப்பகுதி வெகுவிரைவில் நடாத்தும்.

**பல்கலைக் கழகக் கொமிஷன் அறிக்கை**

பல்கலைக் கழகக் கல்விபற்றிய கொமிஷனின் அறிக்கையானது அண்மையில் மகா தேசாதிபதியிடம் ஒப்படைக்கப்பட்டது. இதர விடயங்களுடன் இலங்கைப் பல்கலைக் கழகம் இயங்கும் விதம் பற்றியதும் அதன் நிர்வாகம் பற்றியதுமான அறிக்கையொன்றைத் தயாரிப்பதற்காக மூன்று பிரபலஸ்தர்களைக் கொண்ட பல்கலைக் கழகக் கொமிஷனை மகா தேசாதிபதி நியமித்தார்.

கல்வி சம்பந்தமான பிரச்சனைகள்பற்றிய பொது மக்கள் கருத்துக்களை மதிப்பீடு செய்வதற்கும் அனுபவரீதியான ஆலோசனைகளைப் பெறுவதற்குமாக இந்த அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட மூன்று விசாரணைக் கொமிஷன்கள் சமர்ப்பித்த அறிக்கைகளில் பல்கலைக் கழகக் கொமிஷன் அறிக்கை கடைசியானதாகும். பாடசாலைக் கல்வி சம்பந்தமான சகல விடயங்கள் பற்றிய அறிக்கை யொன்றைத் தயாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட தேசீய கல்விக் கொஷன் அதன் அறிக்கையை முதலாவதாக, 1962 ஆம் ஆண்டு ஜுலை மாதத்தில் வெளியிட்டது. அடுத்தபடியாக தொழில் நுட்பக் கல்விக் கொமிஷன்

(4 ம் பக்கம் பார்க்க)

## மின்சாரக் கட்டணம் அறவிடும் முறை

### சீர்படுத்தற்கான நடவடிக்கை

மின்சாரக் கட்டணங்களை அறவிடுதற்கு அரசாங்க மின்சார வேலைப் பகுதி—தற்சமயம் கையாளும்முறையை சீர்படுத்தும் நோக்கத்துடன் அதனை ஆராய்தற்கு காணி, நீர்ப்பாசன, மின்சார அமைச்சர் திரு. சீ. பீ. டி சில்வா நியமனஞ் செய்த நான்கு பேர்களைக் கொண்ட குழு, கட்டணங்கள் அறவிடப்படும் முறையை ஒழுங்குபடுத்துதற்குப் பல்வேறு நடவடிக்கைகளை அதன் அறிக்கையில் சிபார்சு செய்துள்ளது. இப்பகுதிக்கும் மின்சார உபயோகிப்பாளர்களுக்குமிடையில் ஏற்படும் பூசல்களுக்கான காரணங்களை இந்நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதன்மூலம் நீக்கிவிடலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

காணி, நீர்ப்பாசன, மின்சார அமைச்சின் உதவிக் காரியதரிசி திரு. எல். டி. எஸ். கருணாரத்தின, திறைசேரி ஸ்தாபன, முறைகள் உதவி அதிபதி திரு. சி. எல். டி. சில்வா, நில அளவைப் பகுதி பிரதம கணக்காளர் திரு. சி. விக்கினராஜா, கணக்குப் பரிசோதனை அத்தியட்சர் திரு. எஸ். என். சண்முகநாதன் ஆகியோர் இக்குழுவின் அங்கத்தவர்களாவர்.

# யந்திர மீன்பிடிப் படகுகளை வாங்க கடன் வசதி

"யந்திர மீன்பிடிப்படகுகளை வாங்குதற்கான கடன் கோரும் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விண்ணப்பம் செய்வோர்—

(அ) திடகாத்திரமும் சுறுசுறுப்புமுள்ள ஆழ்கடல் மீனவராகவும்,

(ஆ) 1.1.64 ல் 21 வயதுக்கும் 55 வயதுக்கும் இடைப்பட்டவராகவும்,

(இ) அரசாங்கத்திடம் கடன் பெறுதவராகவும் இருப்பதைத் திருப்தி செய்ய வேண்டும்", என்று

நில, நீர்ப்பாசன, மின்சக்தி அமைச்சு 12.9.63 ல் வெளியிட்டுள்ள பத்திரிகைச் செய்தியொன்று கூறுகிறது. அச்செய்தி மேலும் கூறுவதாவது :—

"கடன் வழங்கப்படுவதற்கு முன்னர் விண்ணப்பத்தாரர்கள் 1,000 ரூபாவைக் கட்டுப்பணமாகச் செலுத்த வேண்டும். விண்ணப்பங்களை இரு பிரதிகளில் தயாரித்து, மீன்பிடி அதிபதி, த. பெ. எண் 531, கொழும்பு—3 என்ற முகவரிக்கு 10.10.63 லன்று அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கக்கூடியதாக அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்படிவங்களை உள்ளூரிலுள்ள மீன்பிடி அலுவலகங்களிலோ அன்றி அந்தந்தப் பிரதேசத்தின் பாராளுமன்ற உறுப்பினரிடமிருந்தோ பெற்றுக்கொள்ளலாம்.

**இதற்கு முன்னர் இக்கடன்கோரி விண்ணப்பித்து, கடன்பெற அங்கீகாரமளிக்கப்படாதவர்கள் மீண்டும் புதிதாக விண்ணப்பிக்க வேண்டும். அப்படி விண்ணப்பிக்கும்போது தங்கள் முன்னைய விண்ணப்பத்தின் சார்பு இலக்கத்தையும் குறிப்பிடவேண்டும்.**

விண்ணப்பங்கள் கிடைத்தவுடன் பெரும்பாக மீன்பிடிப் பரிசோதகர்களினால் வழக்கமாக நடாத்தப்படும் விசாரணையுடன் பொது விசாரணைகளும் நடாத்தப்படும். விசாரணைகள் நடைபெறும் இடங்களும் நேரங்களும் பின்னர் தெரிவிக்கப்படும். இந்தப் பொது விசாரணைகளில் விண்ணப்பதாரர்களுக்கு

(4 ம் பக்கம் பார்க்க)

# உலர் வலய வெற்றிலைச் செய்கை

**உலர்வலயத்திலே யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த வலிகாமம் வடக்கு, மேற்குப் பிரிவுகளில் காணப்படும் செந்நிறமும் கபில நிறமும் பொருந்திய இருவாட்டித் தரைகளிற் பொரும்பான்மையாகச் சிறப்பாகவும் மன்னார், முல்லைத்தீவு, மட்டக்களப்பு மாவட்டங்களிலுள்ள நரைநிறம் பொருந்திய இருவாட்டித் தரைகளில் ஓர் அளவுக்கு அலட்சியமாகவும் வெற்றிலைக் கொடி உண்டுபண்ணப் படுகின்றது.**

### நிலம் பண்படுத்தல்

வெற்றிலைக் கொழுந்து நாட்ட 2–3 மாதங்கட்கு முன்னர் நிலம் பண்படுத்தப் படுதல் வேண்டும்.

(1) நிலத்தின் மேற்பரப்பில் 6–12 அங்குலப்படையாகச் சுள்ளித்தடி, தண்டு, கூளப்பொருள்களைப் பரப்பியெரித்துக் கிருமியை அழித்துக் கொள்க.

(2) மண்செம்மையாகப் பண்படும் வரை உழுது இடப்புடைத்து மறுவுழவு நடாத்துக.

(3) வழமையான இறைப்பு முறைக்கேற்ப பாத்திகள் கட்டிக் கொள்க.

(4) பாத்தி நீர்ப்பாய்ச்சலுக்கு 2–4 அடியகலமும் தொழில் வசதிக்கேற்ற நீளமுமுள்ள தாழ்ந்த பாத்திகளைக் கட்டிக் கொள்ளலாம். எனினும் இரண்டு அடி அகலமும் ஓர் அளவுக்கு உயர்ந்ததுமான மேடைகள் இடையே, நீர்க்கால்கள் உடையனவாய் அமைத்துக் கொள்ளுதல் சிறந்த முறையாகும். நீர்க்கால்கள் மூலம் நீர் பாய்ச்சுதலால் நீர் மிச்சமாகும். பாத்திகளில் நீர் கட்டுதல் ஓர் அளவுக்கு நீரை வீணுக்குவதாகும்.

### வெற்றிலைக் கொடிக்கு கொழுகொம்பு

முள்முருக்கு அல்லது கலியாண முருக்கு (எரித்திரினு இண்டிக்கா) பொதுவாகப் பயன்படுத்தப்படுகின்றது. இது வெற்றிலைக் கொடியின் வளர்ச்சிக்காலம் பூராகவும் உயிர்க்கொழுகொம்பாகப் பயன்படுகின்றது. இதன் இலைகளும் இளங்கிளைகளும் மாடாட்டுக்குச் சிறந்த உணவாகும்.

(1) பாத்திகள் கட்டிய பின்னர் முருக்கந் தண்டுகள் (6–8 அடிகள் நீளம், 4–6 அங்குலங்கள் சுற்று) நாட்டப் படுகின்றன.

(2) பாத்தியின் நீளப்பாட்டு வரம்பிலே ஒவ்வொரு அடி இடைவெளிவிட்டு அவற்றை நாட்டுக. ஒரே முறையில் நடுகையை முடிப்பதற்குப் போதிய தண்டுகள் இல்லாவிடத்து ஒன்றுவிட்டொன்று நாட்டி வெற்றிலைக்கொழுந்து நட்டு $1\frac{1}{2}$ மாத அளவில் வெற்றிடங்களை நிரப்பலாம்.

(3) முருக்கந்தடிகளில் முளை கிளம்பச் செய்ய ஓர் அளவுக்கு நீர்ப்பாய்ச்சிக் கொள்க.

### கொழுந்து நடுகை

கொழுந்து மூலம் வெற்றிலைக் கொடி உண்டு பண்ணப்படுகின்றது. யாழ்ப்பாணத்தில் 3 கணுக்களும் மூன்று வெற்றிலைகளுமுள்ள வெற்றிலைக் கொடித்துண்டம் இதற்குப் பயன்டுகின்றது. வயதில் 3 ஆண்டுகட்கு மேற்படாத தாய்க்கொடியிலிருந்து கொழுந்து வெட்டப்படுகின்றது. போதிய கொழுந்துகளைத் தாய்க்கொடிகளிலிருந்து பெற்றுக் கொள்ளவியலாதவிடத்து, மொழி வேருள்ள முதலாம் கிளைகளிலிருந்து கொழுந்து எடுத்துக் கொள்ளலாம். முந்திய கத்தரிப்பு மட்டத்திலிருந்து 2–3 வெற்றிலைகளை விட்டுத் தாய்க் கொடியையும், தாய்க்கொடியிலிருந்து 1–2 அங்குலங்கள் விட்டு முதலான கிளையையும் வெட்டிக் கொள்க. வெட்டிய கொடிகளை மூவிலைத் துண்டங்களாக வெட்டுக.

தண்டிலிருந்து கீழ் இலையைக் கால் அங்குல இலைக்காம்பு விட்டுக் கொய்து மத்திய இலையை நிமிர்த்திப் பிடித்து, ஈரமுலர்வதைத் தடுத்தற்பொருட்டு மேலிலையைப் புரட்டி மடித்துச் சுற்றி மென்மையான பனைச்சார்க்கீற்றினுல் கட்டுக.

(1) ஒவ்வொரு முருக்க மரத்திலும் இவ்விரண்டு கொடிகள் தாவிப்படரக் கூடியதாக நிலத்திற் பொளியடித்துக்கொழுந்தை அதன் நடுக் கணுவரை நேராகப்பதித்துப் பொளியை மண்ணுல் மூடுக.

(2) நட்ட கொழுந்துக்கு நிழலிடுக.

மழைக் காலத்தில் கொழுந்தை நேரடியாகத் தோட்டத்திலே நாட்டலாம். எனினும் நோய் அதிகஞ் சம்பவிப்பது இயல்பு. பதிவைத்து முளைகிளம்பச் செய்த கொழுந்துகள் மிகவிரைவில் நிலையுறுமாகையால் அங்ஙனஞ் செய்யப் பட்ட கொழுந்துகளை நாட்டுதல் உத்தமம். கொழுந்துகளைத் துணியால் மூடப்பட்டதும் தென்னம்பொச்சுத் தூளுந் தும்பும் உள்ளதுமான இனம் பெருக்கற் கருவியில் பதிவைத்து தினந்தோறும் இருவேளைகளில் நீர் ஊற்றி ஈரப்பதனை அதிகப் படுத்திக்கொள்ளலாம்.

### வெற்றிலைக் கொடியைப் பராமரித்தல்

**வெற்றிடங்கள்.**—நட்டு இருவாரங்கட்குப் பின்னர் வெற்றிடங்களை நிரப்புக.

**கொழுந்தைப் பலப்படுத்தல்.**—நட்டு 3 வாரங்கட்குப் பின்னர் சுருளை அவிழ்த்து 3–4 நாட்களுக்குக் கொழுந்தைத் திறந்து வைத்துக்கொள்க.

**கொடியை மேல் நோக்கி வளரச் செய்தல்.**—நட்டு ஒரு மாதத்திற்குப் பின்னர், முளையை காய்ந்த கம்புகள் துணையாக மேல் நோக்கி வளரச் செய்க. கொடிகள் 2 அடிகட்கு வளர்ந்தவுடன் அவற்றை முருக்க மரங்களில் மென்மையான பனையோலை அல்லது தென்னோலைக் கீற்றினுல் கட்டுக.

முதலில் ஒவ்வொரு கொழுந்திலிருந்தும் நடுக்கணுக் கண்ணிலிருந்தும் மேல் கணுக் கண்ணிலிருந்துங் கிளம்பும் இரு அங்குரங்களையும் வளரவிடுக. சில நாட்களுக்குப் பின்னர் பலங்குறைந்த அங்குரத்தையகற்றுக.

முருக்க மரங்களில் பனஞ்சலாகை அல்லது கமுகஞ்சலாகைகளை ($1\frac{1}{2}$ அங்குல அகலம்) மரங்களின் குறுக்கே வைத்துக் கட்டுதலால் வெற்றிலைக் கொடிகள் சுலபமாகப் பரந்து படரும்.

**நீர்ப்பாய்ச்சல்.**— முதற்பன்னிரண்டு நாட்களிலும் தினந்தோறும் நீர்ப்பாய்ச்சிப் பின்னர் ஒன்று விட்டொரு நாட் பாய்ச்சிக் கொள்க. களைகட்டல், சருகு பொறுக்கல், பாத்தி மண்ணைப்பண்படுத்தல், பாத்தி கட்டல் முதலியனவும் கவனித்தற்பாலன.

**எருப்பெய்தல்.**—ஆண்டு தோறும் ஓர் ஏக்கருக்கு 15–20 வண்டி எரு விகிதம், நன்கு உக்கியதும் பொடியாக்கப்பட்டதுமான எருப்பெய்து கொள்க.

யாழ்ப்பாணத்தில் மேற்படி அளவின எரு மூன்று பாகமாகப் பிரிக்கப்பட்டு கொழுந்து நட்டு 6, 10, 15 மாதங்களில் முறையே பயன்படுத்தப்படுகின்றது.

மீண்டும் மேற்படிமுறையில் அங்கே எருப்பெய்தல் வழக்கமாகும். தேவையானபோது, வெற்றிலைக்கொடியை இறக்கி, அடிப்பாகத்தைச் சுற்றி மண்ணைக்கிண்டிக் குழியில் எருப்போட்டு அதில் சுருளைப் பதிப்பதுமுண்டு.

**கத்தரித்தல்.**—(1) கொழுந்து நட்டு 2 மாதங்கட்குப் பின்னர் தாய்க்கொடி 3 இலைகளுடன் நிற்கவிட்டுக் கத்தரிக்கப்படுகின்றது. நுனிக் கணுக்கண்ணிலிருந்து கிளம்பும் முளை வளரவிடப்படும்.

(2) இரு மாதங்கட்குப் பின்னர் புதுக் கொடி 3 இலைகளுடன் நிற்கவிட்டுக் கத்தரிக்கப்படும்.

(3) மேல் முளையை மட்டும் வளரவிட்டு இரு மாதங்கட்குப் பின்னர் மேற்படி முறையில் கத்தரித்துக் கொள்க.

(4) மேற்கண்ட முறையில் மத்திய கொடி இரண்டு மாதங்கட்கொரு முறை கத்தரிக்கப்படுகின்றது. மூன்றும் முறை கத்தரித்த பின்னர் அடியிலிருந்து ஐந்தாம் இலைக்கு மேற் கணுக்களிற் கிளம்பும் முளைகளும் வளரவிடப்படுகின்றன.

(5) இடை முளைகள் ஐந்து இலைகள் விடப்பட்டுக் கத்தரிக்கப்படுகின்றன.

(6) மூலக்கொடி 6–10 அடிகட்கு வளர்ந்த பின்னர் மூன்றும் படையான கிளைகள் வளரவிடப்படுகின்றன.

### வெற்றிலை ஆய்தலும் கட்டுதலும்

தாய்க்கொடியின் இலைகளும் இடை முளைகளின் இலைகளும் "சாய்ப்பு" என்று அழைக்கப்படுகின்றன. மூன்றும் படியான கிளைகளில் கண்ணிகள் தோன்றி அவற்றிலிருந்து "மாற்று" வெற்றிலைகள் உண்டாகின்றன. "சாய்ப்பு" வெற்றிலைகள் பொதுவாகப் பெரியன. கூடுதலாகக் கறுத்திருக்கும், அவற்றின் காம்புகளின் இரு அலகுகளும் வேறுபட்ட தன்மையிற் காணப்படும். "மாற்று" வெற்றிலைகள் "சாய்ப்பு" வெற்றிலைகளிலும் மக்களால் விரும்பப்படுகின்றன.

(1) இடை முளைகளிலிருந்து முதலாம் ஆண்டு "சாய்ப்பு" வெற்றிலைகளைப் பறித்துக்கொள்ளலாம்.

(2) வெற்றிலைக் கொடிகள் ஓராண்டுப் பருவமெய்திய பின்னர் "மாற்று" வெற்றிலைகள் ஆயலாம்.

பொதுவாக ஒரு மாதத்தில் இரண்டொரு தடவை வெற்றிலை ஆயப்படுகின்றது. மாற்றுக் கண்ணியில் நுனியில் இரு இளம் வெற்றிலைகளை விட்டுக் கீழுள்ள இலைகளைப் பறித்துக் கொள்க. இலைக்காம்பில் 1/5 அங்குலம் விட்டு நகத்தினுல் நுள்ளி இலைகளை ஆய்ந்து கொள்ளலாம்.

(1) மூன்றும் ஆண்டுக்குப் பின்னர் "மாற்று" வெற்றிலையையும் "சாய்ப்பு" வெற்றிலையையும் ஆய்ந்து கலந்து "அடுவலாக" விற்றுக் கொள்ளலாம்.

வலிகாமம் வடக்குப் பிரிவில் பொதுவாக நான்கு தர வெற்றிலைகள் முறையே "சாய்ப்பு", "மாற்று", "அடுவல்", "கழிப்பு" விலைப்படுகின்றன. சிற்றிலைகளும் கசங்கிய, ஒடிந்த இலைகளும் நோய்ப்பட்ட இலைகளும் "கழிப்பு" வகுப்பிற் சேருகின்றன.

வலிகாமம் மேற்குப் பிரிவில் "மாற்று", "சாய்ப்பு" என்னும் இருதர வெற்றிலைகள் விலைப்படுகின்றன. மன்னார்ப் பிரிவில் "மாற்று", வெற்றிலையும், மட்டக்களப்புப் பிரிவில் "பகழி", "கட்டு", "தூட்கட்டு" என்னுந் தரவெற்றிலைகளும் விலைப்படுகின்றன.

### நோய்கள்

பொதுவாக, இலைப்புள்ளி, கருந்தடி, பூஞ்சணம் ஆகிய நோய்களும் வட்டப்புழுவால் வேருக்குச் சேதமும் உண்டாகின்றன.

நோய்ப்பட்ட எல்லா வெற்றிலைகளும் கொடிகளின் துண்டங்களும் எரித்து அழிக்கப்படவேண்டியன.

(1) போடோக் கலவை அல்லது 10 கலன் நீருக்கு 4 அவுன்சு விகிதம் குப்பிரவிற்றுப் போன்ற செம்பு பங்கசு கொல்லியொன்று சேர்ந்த கலவை விசிறப்படுதலால் இலைப்புள்ளி நோய் பரவாது தடுக்கப்படும். பூஞ்சண அல்லது பழுப்பு நோயை 2 கலன் நீருக்கு 1 அவுன்சு செம்பு பங்கசு கொல்லி விகிதஞ் சேர்ந்த கலவையை விசிறித் தடுத்துக் கொள்க.

கருந்தடி சம்பவிக்கும்போது நோய்ப்பட்ட கொடியையகற்றி அது வளர்ந்த இடத்தை, ஒரு கலன் நீருக்கு 1 அவுன்சு யேயின்பாய் பொருள் விகிதங் கரைத்து ஒரு சதுர யார் நிலத்திற்கு ஒரு கலன் கரைசல் விகிதம் ஊற்றி, தொற்று நீக்குக.

வட்டப்புழுவைக் கொல்ல நிலத்தூமமாக்கி ஒன்றினைப் பிரயோகித்துக் கொள்க.

நோய்க் காணப்பட்டவுடன் மருந்து விசிறல் வேண்டும். நோய் சாதாரணமாகச் சம்பவிக்கும் இடங்களில் தடுப்பு முறையாகப் பரிகாரத்தை அனுசரித்தல் விரும்பத்தக்கது.

கமத்தொழில் விளக்கம்

# இ. போ. ச. செய்திகள்

## (சென்ற வாரத் தொடர்)

| | |
|---|---|
| மாத்தளை—ஒவிலிக்கந்த—அங்குரும்ப | ரத்தோட்ட |
| குருணுகல்—கொபெய்கானே, பாதெனியா வழியாக | குருணகல் |
| கேகாலே—அத்துகொட | கலிகமுவ |
| கஹவத்தை—நிவித்திகல | நிவித்திகல |
| பலாங்கொட—மகாவால்தென்ன | பலாங்கொட |
| பத்தேகம—எட்டுமலே | ஹினிதும |
| மாத்தறை—வல்கம, உயனவத்தை வழியாக | மாத்தறை |
| குருணுகல்—மத்தாவ, போகமுவ வழியாக | மாவத்தகம |

**தற்போதுள்ள சேவைகளுக்கு, சபை பின்வரும் நீடிப்புக்களை அங்குரார்ப்பணம் செய்தது :—**

| நீடிப்பு | தொகுதி |
|---|---|
| மடபாத்த—பிலியந்தலே சேவை, துடுவை வரை நீடிப்பு | கெஸ்பேவ |
| அவிசாவலே—கறந்தனை சேவை, வேவில வரை நீடிப்பு | கிரியல்ல |
| கண்டி—லியனகஹவெல சேவை, பறணப்பட்டிய வரை நீடிப்பு | உடுநுவர யட்டிநுவர |
| கண்டி—மல்கமன சேவை, அலகோலங்க வரை நீடிப்பு | ஷ |
| அனுராதபுரம்—பராக்கிரமபுர சேவை, சிரிபுர வரை நீடிப்பு | மதவாச்சி கொரவ பத்தானை |
| குருணுகல்—மாவத்தகம சேவை, பறப்பே வரைக்கும் | மாவத்தகம |
| திருகோணமலை—கந்தளாய் சேவை, 85ம் மைற்கட்டைவரை நீடிப்பு | மூதூர் |
| கண்டி—அக்குரான சேவை, துனுவில வரை நீடிப்பு | அக்குரான |
| கொழும்பு—புத்துபாகல சேவை, லுனுகம வரை நீடிப்பு | அத்தனகல |
| இரத்தினபுரி நகர சேவை—ஹக்கமுவ வரை நீடிப்பு | இரத்தினபுரி |
| கம்பஹா—புத்துபாகல சேவை, தொம்பே, தெக்கட்டன வரை நீடிப்பு | தொம்பே |
| கொழும்பு—திகாரியா சேவை, வியாங்கொடை வரை நீடிப்பு | அத்தனகல |
| பந்துருகொட—வியாங்கொட சேவை, கலகெடிஹேன வரை நீடிப்பு | அத்தனகல |
| அத்தனகல—மீறிகம சேவை, வரக்காபொல வரை நீடிப்பு | மீறிகம |
| நீர்கொழும்பு—மாதம்பெல்ல சேவை, பதல்கம வரை நீடிப்பு | திவுலப்பிட்டி |
| நுகேகொடை—பிற்றகோட்டே சேவை, பத்தேகானே வரை நீடிப்பு | கோட்டே |
| யாழ்ப்பாணம்—தெல்லிப்பளை சேவை, கொல்லன்கலட்டிவரை நீடிப்பு | காங்கேசன்துறை |
| பொரளை—மொரகஸ்முல்ல சேவை, 4ம் ஒழுங்கை வரை நீடிப்பு | கோட்டே |
| கண்டி—வெலம்பொட சேவை, வட்டதெனியா வரை நீடிப்பு | உடுநுவர |
| கொழும்பு—பின்ஹேன சேவை, வெள்ளிக்கிழமை சந்தைச் சந்திவரை நீடிப்பு | கொட்டாவ |
| கம்பஹா—நய்வல சேவை, வியாங்கொடை வரை நீடிப்பு | அத்தனகல |
| நீர்கொழும்பு—மெதகம்பிட்டி சேவை, வியாங்கொடை வரை நீடிப்பு | அத்தனகல |
| கேகாலே—மகா பல்லேகம சேவை, கினிவிற்ற வரை நீடிப்பு | கலிகமுவ |
| திருகோணமலை—கந்தளாய் (85 ம் மைற்கட்டை) சேவை, சீனித் தொழிற்சாலை வரை நீடிப்பு | மூதூர் |
| தெமட்டகொட—கோட்டை மாற்றுச் சேவை, ஹல்ட்ஸ்டோர்ப் வழியாக | கொழும்பு மத்தி |
| யாழ்ப்பாணம்—கீரிமலை சேவை, மாதகல் மேற்கு வரை நீடிப்பு | காங்கேசன்துறை |
| கொழும்பு—லுனுகல சேவை, மாஹேனவரை நீடிப்பு | அத்தனகல |
| பருத்தித்துறை—மானிப்பாய் சேவை, நவாலி கடிதப்பெட்டிச் சந்தி வரை நீடிப்பு | உடுவில் |
| இடங்கொட—அயகம சேவை, பறகல வரை நீடிப்பு | கலவான |
| கோட்டை மட்டக்குளி சேவை, பண்ணை வீதி வரை நீடிப்பு | கொழும்பு வடக்கு |
| குருணுகல்—கனேவத்த சேவை, தம்பகல்ல வரை நீடிப்பு | ஹிரியால |
| பொரளை—பன்னிப்பிட்டி சேவை, கொட்டாவ வரை நீடிப்பு | கொட்டாவ |
| கண்டி—குண்டசாலே சேவை, மகாவத்தை வரை நீடிப்பு | குண்டசாலே |
| மன்னூர்—எருக்கலம்பிட்டி சேவை, தாராக்குண்டு வரை நீடிப்பு | மன்னூர் |
| ஹோமகம—கிரிவத்துடுவ சேவை, கோணபொல வரை நீடிப்பு | ஹொரணை |
| ருகம—கடவத்தை சேவை, றன்முத்துகல வரை நீடிப்பு | மகர |
| அம்பாறை—தமன சேவை, அம்பலன்-ஓயா வரை நீடிப்பு | அம்பாறை |
| கண்டி—நில்தந்தஹின்ன சேவை, ருபஹா வரை நீடிப்பு | வலப்பனை |
| கண்ணூஸ்பத்திரி—வெல்லம்பிட்டியா சேவை, அங்கொட வரை நீடிப்பு | கொலன்னுவ |
| நீர்கொழும்பு—மீறிகம சேவை, மீறிகம ஆஸ்பத்திரி வரை நீடிப்பு | மீறிகம |
| கண்டி—அங்குராங்கெட்ட சேவை, மாவுல வரை நீடிப்பு | வலப்பனை |
| கொழும்பு—மாஹேன சேவை, றதவான வரை நீடிப்பு | தொம்பே |
| நீர்கொழும்பு—வியாங்கொட மாற்றுச் சேவை, திவுலப்பிட்டி, பலப்பான வரை நீடிப்பு | மினுவாங்கொட |
| கொழும்பு—கிறிந்திவெல சேவை, ஹிசெல்ல வரை நீடிப்பு | தொம்பே |
| இரத்தினபுரி—கார்னி சேவை, பாலபத்தல வரை நீடிப்பு | இரத்தினபுரி |
| குருணுகல்—மாவத்தகம சேவை, கஹபத்வில வரை நீடிப்பு | மாவத்தகம |
| சிலாபம்—உடப்புவ சேவை, ஆண்டிமுனை வரை நீடிப்பு | புத்தளம் |
| அம்பாறை—உகன சேவை, பக்கியல்ல வரை நீடிப்பு | அம்பாறை |
| கொழும்பு—பிட்டிபனை சேவை, நீர்கொழும்பு வரை நீடிப்பு | நீர்கொழும்பு |
| பதுளை—மொணருகலே சேவை, தம்பகல்ல வரை நீடிப்பு | மொணருகலே |
| பொரளை—மாலபே சேவை, கடுவெல வரை நீடிப்பு | கொட்டாவ |
| அகங்கம—பஞ்சலியா—வெலிகம சேவை, வெலிகம ஆஸ்பத்திரி வரை நீடிப்பு | வெலிகம |
| நாவலப்பிட்டி—ஹப்புகஸ்தலாவ சேவை, ஹரங்கல வரை நீடிப்பு | ஹேவாகெட்ட |
| புத்தளம்—காரைதீவு சேவை, எழுவங்குளம் வரை நீடிப்பு | புத்தளம் |
| கண்டி—ரத்தேமுல்ல சேவை, கல்தென்ன வரை நீடிப்பு | ஹேவாகெட்ட |
| வந்துறும்ப—பத்தேகம சேவை, ஊணன்விட்டி வரை நீடிப்பு | ஹினிதும |
| குளியாப்பிட்டி—படிவெல சேவை, போவத்தை வரை நீடிப்பு | பிங்கிறியா |
| ருகம—கந்தானை சேவை, வல்பொல வழியாக ; பேரலந்த வரை நீடிப்பு | ஜா—எல |
| கம்பஹா—தேவாலபொல சேவை, கல்கந்த வரை நீடிப்பு | மினுவாங்கொட |
| கண்டி—மெதவெல சேவை, தொறணகம வரை நீடிப்பு | அக்குரான |
| பதுளை—றில்பொல சேவை, மொரகல்ல வரை நீடிப்பு | பதுளை |
| யாழ்ப்பாணம்—புன்னாலைக்கட்டுவான் சேவை, குரும்பசிட்டி வரை நீடிப்பு | உடுவில் |
| குளியாப்பிட்டி—கிறியுள்ள சேவை, மீறிகம வரைக்கும் | கட்டுகம்பொல |
| கிளிநொச்சி—கந்தாவளை சேவை, தர்மபுரம் வரை நீடிப்பு | கிளிநொச்சி |
| சங்குப்பிட்டி—பூநகரி சேவை, நல்லூர் வரை நீடிப்பு | கிளிநொச்சி |
| சங்குப்பிட்டி—பூநகரி சேவை, வெள்ளாங்குளம் வரை நீடிப்பு | கிளிநொச்சி |
| கண்டி—மெணிக்ஹின்ன சேவை, கொங்காலே வரை நீடிப்பு | குண்டசாலே |
| எல்பிட்டி—பம்பரவான சேவை, பிற்றிகல வழியாக, மெட்டி விழியா வரை நீடிப்பு | பெந்தா எல்பிட்டி |
| நுவரேலியா—நில்தந்தஹின்ன சேவை, சூரியகஹபத்ன வரை நீடிப்பு | வலப்பனை |
| நுவரேலியா—சூரியகஹபத்ன சேவை, நில்தந்தஹின்னவரை நீடிப்பு | வலப்பனை |
| கண்டி—தங்கொல்ல சேவை, அஸ்கிறியா வரை நீடிப்பு | கண்டி |
| ஹொரணை—கொட்டாவ சேவை, மகரகம வரை நீடிப்பு | ஹொரணை |
| மன்னூர்—இலுப்பைக்கடவை சேவை, வெள்ளாங்குளம் வரை நீடிப்பு | மன்னூர் |
| காலி—ஹியாரே சேவை, கோணமுல்ல வரை நீடிப்பு | அக்மீமன |
| குருணுகல்—பொரபொல சேவை, தல்விற்ற வரை நீடிப்பு | குருணகல் |
| வெலிப்பென்னகஹமுல்ல—மாக்கந்துர சேவை, வெட்டகெய்யாவ வரை நீடிப்பு | கட்டுகம்பொல |
| கண்டி—மாவில்மட சேவை, வட்டபுலுவ வரை நீடிப்பு | செங்கடகல |
| மட்டக்களப்பு—பொலன்னறுவை சேவை, அனுராதபுரம் வரை நீடிப்பு | மட்டக்களப்பு |
| நீர்கொழும்பு—துங்கஹா சேவை, பல்லப்பன, கல்கந்த வரை நீடிப்பு | மினுவாங்கொட திவுலப்பிட்டி |
| நீர்கொழும்பு—மறதகஹாமுல்ல சேவை, பல்லப்பன, கல்கந்த வரை நீடிப்பு | —ஷ— |
| மின்னேரி—கதுவுல்ல சேவை, பன்சல்கொடல்ல வரை நீடிப்பு | மின்னேரியா |
| பசறை—கொட்டமுதுன சேவை, றநுகல்ல வரை நீடிப்பு | பசறை |
| சிலாபம்—சிங்கக்குழி சேவை, விகிரியாகம வரை நீடிப்பு | கட்டுக்கம்பொல |
| கண்டி—எத்துல்கம சேவை, கலாகொல்ல வரை நீடிப்பு | ஹேவாஹெட்ட |
| தலவாக்கொல்லை—போப்பத்தலாவ சேவை, மெணிக்பாலம வரை நீடிப்பு | நுவரேலியா |
| கண்டி—பேராதனை பல்கலைக் கழகம் சேவை,—பல்கலைக் கழக பல் பாடசாலை வரை நீடிப்பு | கண்டி |
| குளியாப்பிட்டி—கிறியுள்ள சேவை, மீறிகம வரை நீடிப்பு | கட்டுக்கம்பொல |
| மட்டக்களப்பு—பொலன்னறுவை சேவை, அனுராதபுரம் வரை நீடிப்பு | மட்டக்களப்பு |
| அவிசாவலே—கோனகல்தெனியா சேவை, மீறிகம வரை நீடிப்பு | அவிசாவலே, அத்தனகலே |
| பண்டாரவெல—கினிகம சேவை, ஹீலோயா வரை நீடிப்பு | பண்டாரவளை |
| மொறட்டுவ—புவாக்கறம்ப சேவை, இந்திபெத்த வரை நீடிப்பு | மொறட்டுவ |
| தெல்தெனியா—புத்துஹப்புவ சேவை, துங்கிந்த வரை நீடிப்பு | தெல்தெனியா |
| கண்டி—கனேகொட சேவை, தோலுவ வரை நீடிப்பு | கம்பொல |
| அனுராதபுரம்—மகாவிலாச்சியா சேவை, மன்னூர் சந்தி | அனுராதபுரம் |
| போகஸ் சந்தி வரை நீடிப்பு | அனுராதபுரம் |
| மத்துகம—வலல்விற்ற சேவை, தொத்தகா வரை நீடிப்பு | அகலவத்த |
| தெகிவளை—அண்டர்சன் வீதி சேவை, துட்டுகெமுனுத் தெருச் சந்திவரை நீடிப்பு | தெகிவளை, கல்கிசை |
| களுத்துறை—யட்டதொல சேவை, நாவற்துடுவ வரை நீடிப்பு, அலுத்கங்கொட வழியாக | அகலவத்த |

(தொடரும்)

### இ. போ. ச. செய்திகள்

இவ்வருட எப்ரில் மாதமுதல் பரீட் சார்த்தமாக மூன்று மாதங்களுக்கு அமுல்நடத்தப்பட்ட இ. போ. ச. கண்டக் டர்களுக்கும் சாரதிகளுக்குமான ஊக்க மளிக்கும் மிகையூதியத் திட்டம் வெற் றியை யளித்துள்ளது.

வருட இறுதியில் இவ்விடயம் மீள வாயப்படும் வரை இத்திட்டத்தைத் தொடர்ந்து அமுல் நடத்தவேண்டு மெனச் சபை தீர்மானித்துள்ளது.

இத்திட்டத்தின் பிரதான நோக்கங் கள் ஈடேறிற்று. பிரயாணிகள் பஸ் ஸில் ஏற்றப்படாது விட்டுச் செல்லப்பட் டார்கள் என்பதைப்போன்ற முறையீடு களின் எண்ணிக்கை அருகியதுடன் வருமானத்திலும் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்புக் காணப்பட்டது.

மிகையூதியத் திட்டம் அமுலிலிருந்த காலத்தில், அதாவது—எப்ரில் மாதம் 20 ம் திகதி தொடக்கம் ஜூன் மாதம் 30 ம் விகதிவரை—வருமானம் சென்ற வருடத்தில் இதே காலவெல்லைக்கான தைக் காட்டிலும் 13·98 இலட்சம் அதிக மாக ஈட்டியது. சென்ற வருடத்தில் இதே காலவெல்லையில் செயலாற்றப்பட்ட மைல் கணக்குடன் ஒப்பிடும்போது இவ்வரு டம் 2,84,354 மைல்கள் குறைவாகச் செயலாற்றப்பட்டுள்ளன. கடந்த வருடம் தினசரி செயலாற்றிய பஸ்களின் சராசரி எண்ணிக்கையுடன் ஒப்பிடும் கால், இவ்வருடத்தில் இதே காலவெல்லையில் 59 பஸ்கள் குறைவாகச் செயலாற்றப் பட்டன.

இக்காலவெல்லையில் ரூபா 1,39,0'0 மிகையூதியங்களாக அளிக்கப்பட்டது.

நிர்வாகப் பணியாளர்களாலும் பஸ் குழுவினர்களாலும் இத்திட்டம் மிக ஊக்கத்துடன் நடத்தப்பெற்று வந்தது என்பதைச் சபை அறிந்துகொண்டது.

## கல்விக்கொமிஷன்

(1 ம் பக்கத் தொடர்)

அதன் அறிக்கையை கடந்த மாதத்தில் வெளியிட்டது. தொழில் நுட்பக் கல்வியைச் சீர்படுத்தும் வழிவகைகள் பற்றிய அறிக்கையொன்றைத் தயாரிப்பதற்காகவே இக்கொமிஷன் நியமிக்கப்பட்டது.

இம்மூன்று கொமிஷன்கள் செய்துள்ள சிபார்சுகளை அதிகாரிகள் இப்போது ஆராய்ந்து வருகின்றனர். இலங்கையில் தேசீயக் கல்வி முறையொன்றைத் தாபிப்பதற்குத் தேவையான சகல சட்டரீதியான வசதிகளைக் கொண்டிருக்கும் அடுத்த கல்வி மசோதாவைத் தயாரிக்கும்போது இந்தச் சிபார்சுகள் கவனத்துக்கெடுத்துக் கொள்ளப்படும்.

**பாடசாலைகளில் அனுமதித்தல்**

பாடசாலைகளில் பிள்ளைகளை அனுமதிப்பதுபற்றிய 1964 ஆம் ஆண்டுக்கான திட்டம் தொடர்பாகக் கல்விப்பகுதி சகல பாடசாலை அதிபர்களுக்கும் உதவிக் கல்வி அதிபதிகளுக்கும் கல்வி அதிகாரிகளுக்கும் பணிப்புரை வழங்கியிருக்கிறது.

இந்த விதிகளின்படி.—

1. பிள்ளைகளை அனுமதிக்கும் நோக்கத்துக்காக சகல ஆரம்பப் பாடசாலைகளும் ஆரம்ப வகுப்புகளையுடைய கல்லூரிகளும் இதர பாடசாலைகளும் "பிரதேசப் பாடசாலை" களாகப் கணிக்கப்படும்.

2. ஆரம்பப் பாடசாலைகளிலும் வகுப்புகளிலும் வழக்கமாக வருட ஆரம்பத்திலேயே பிள்ளைகள் அனுமதிக்கப்படுவர். 1964 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ந் திகதியன்று குறைந்தபட்சம் 5 வயது பூர்த்தியடைந்துள்ள பிள்ளைகளே அனுமதிக்கப்படுவர்.

3. 1964 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ந் திகதியன்று 5 வயது பூர்த்தியடைந்துள்ள பிள்ளைகளை அனுமதித்தபின் வெற்றிடங்கள் உள்ள ஆரம்பப் பாடசாலைகளில் 1964 ஆம் ஆண்டு மே மாதம் 1 ந் திகதிவரை, இக்காலத்துக்குள் 5 வயது பூர்த்தியடைந்துள்ள பிள்ளைகள், அவர்கள் பெற்றோர் விரும்பட்சத்தில் தொடர்ந்து அனுமதிக்கப்படலாம். அடுத்து வருகின்ற பிள்ளையொன்றுக்கு வெற்றிடமொன்றை வைத்திருக்கும் பொருட்டு, வருட ஆரம்பத்தில் அனுமதி கோரி வருகின்ற சரியான வயதுடைய பிள்ளைகளுக்கு அனுமதியளிக்க மறுக்கப்படமாட்டாது.

4. பாலர் கீழ்ப்பிரிவு வகுப்புக்கு முதன் முறையாக அனுமதிகோரிவரும் ஒரு பிள்ளைக்கு குறித்த வயதுக்கு மேற்பட்டுவிட்டதென்ற காரணத்தைக்கொண்டு அனுமதியளிப்பதற்கு மறுக்கப்படமாட்டாது.

**சாம்ராஜ்ய புலமைப் பரிசில்கள்**

பிரிட்டிஷ் பல்கலைக் கழகங்களில் பயிற்சிபெறுவதற்காக எழு இலங்கையருக்கு இவ்வருடத்தில் சாம்ராஜ்ய புலமைப் பரிசில்கள் வழங்கப்பட்டுள்ளன. சாம்ராஜ்ய புலமைப் பரிசில் கொமிஷனாலே இப்புலமைப் பரிசில்கள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வருடத்தில் 33 நாடுகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு மொத்தம் 219 புலமைப் பரிசில்களை வழங்கியிருக்கிறது. இந்தக் கொமிஷன்.

# இலங்கை வானொலி நிகழ்ச்சிகள்

### 20.9.63 தொடக்கம் 22.9.63 வரை தேசிய ஒலிபரப்பு

**வெள்ளி**

**செப்டம்பர் 20**

காலை

6-45 பாமாலை‡
6-55 இஸ்லாமிய நற்சிந்தனை†
மவுலவி ஏ. எல். எம். இப்றுஹீம்
7-00 செய்திகள்
7-10 அறிவிப்புகள்
7-15 தோத்திரப் பாடல்கள்
எம். சிவராஜா
7-45 திரை இசை
8-15 இஸ்லாமிய கீதம்†
8-30 ஒலிபரப்பு முடிவு

பகல்

12-00 சித்ரகானம்†
12-45 செய்திகள்
12-55 அறிவிப்புகள்
1-00 கதம்ப இசை†
1-30 ஒலிபரப்பு முடிவு

மாலை

5-00 **சிறுவர் பகுதி—**
பிறந்தநின வாழ்த்துக்கள்
5-15 நாகசுரம்‡
6-00 செய்திகள்
6-10 விலைவாசிகள்
6-15 கிராம சஞ்சிகை—
திருக்குறள் வகுப்பு யுனெஸ்கோ சித்திரம்
6-45 வீணை—நிலைய வித்வான்
7-00 ஞானாஞ்சலி—
7-30 நேயர் விருப்பம்†
8-00 முஸ்லிம் நிகழ்ச்சி—
அரேபிய சங்கீதம்†
8-15 நாடகம்—
**" இருவரும் வாழவில்லை "—**
**ஆர். என். சைபுத்தீன் சாஹிப் எழுதியது**
8-45 இஸ்லாமிய கீதம்†
9-00 செய்திகள்
9-10 அறிவிப்புகள்
9-30 கதாப் பிரசங்கம்—
எஸ். விஞசித்தம்பி
10-15 இசையமுதம்
10-30 ஒலிபரப்பு முடிவு

★ ★ ★

**சனி**

**செப்டம்பர் 21**

காலை

6-45 உதய கீதம்‡
6-50 சைவ நற்சிந்தனை‡
க. ஆழ்வாப்பிள்ளை
6-55 கிறிஸ்தவ நற்சிந்தனை—
வண. வி. எஸ். டீ. சத்தியநாதன்
7-00 செய்திகள்
7-10 அறிவிப்புகள்
7-15 மூவர் இசை
7-45 திரை இசை†
8-15 இஸ்லாமிய கீதம்†
8-30 ஒலிபரப்பு முடிவு

பகல்

12-00 சித்ரகானம்†
12-45 செய்திகள்
12-55 அறிவிப்புகள்
1-00 கதம்ப இசை†
1-30 ஒலிபரப்பு முடிவு

மாலை

5-00 **சிறுவர் பகுதி**
பிறந்தநின வாழ்த்துக்கள்
5-15 இளைஞர் மன்றம்
5-45 திரை இசை
6-00 செய்திகள்
6-10 விலைவாசிகள்
6-15 **கிராம சஞ்சிகை—**
சனசமூக நிலையம்
6-45 வயலின்—
ஸ்ரீதேவி பத்மநாதன்
7-15 கண்டதும் கேட்டதும்——செய்திச் சுருள்
7-30 நேயர் விருப்பம்
8-00 **முஸ்லிம் நிகழ்ச்சி—**
மலாய்ப் பேச்சு " வாரீர் மலாயீர் "—
எம். அமீன் அக்பர்
8-15 பேச்சு—
" நீக்கமற நிறைந்த நித்யன் "
(மறு ஒலிபரப்பு)
8-30 பாட்டு—
நஜ்மா அப்துல் காதர்
9-00 செய்திகள்
9-10 அறிவிப்புகள்
9-15 பேச்சு—
வானொலி வைத்தியர்
9-30 பாட்டு—
ஏ. நடராஜா
10-30 ஒலிபரப்பு முடிவு

✶ ✶ ✶

**ஞாயிறு**

**செப்டம்பர் 22**

காலை

6-45 பாமாலை‡
6-55 கத்தோலிக்க நற்சிந்தனை—
வண. வி. எஸ். டீ. சத்தியநாதன்
7-00 செய்திகள்
7-10 அறிவிப்புகள்
7-15 தேர்ந்த இசை
7-15 தேர்ந்த இசை
7-45 திரை இசை
8-00 பௌத்த பிரசங்கம்—
வண. நில்வக்க சோமானந்த
8-15 தமிழ் மூலம் சிங்களம்—
**என். டி. பீரிஸ்**
8-30 ஞானாஞ்சலி—(மறுஒலிபரப்பு)
9-00 இஸ்லாமிய சமய பாடசாலை—
**நடத்துபவர் : இஸட் எல். எம். முஹம்மத்**
9-30 திரை இசை
10-00 ஒலிபரப்பு முடிவு

பகல்

11-30 சிறுவர் மலர்—
தயாரிப்பு : வானொலி மாமா
12-15 நேயர் விருப்பம்†
12-45 செய்திகள்
12-55 அறிவிப்புகள்
1-00 மாதர் பகுதி—
1. எழில் தரும் இல்லம்—பேச்சு
**இந்திரா மஹாதேவன்**
2. குழந்தைகளும் பெற்றோரும்—
பேச்சு—ஷாஜஹானி புஹாரி
2. வீட்டுக்குறிப்புகள்
1-30 ஒலிபரப்பு முடிவு

மாலை

5-00 **சிறுவர் பகுதி—**
பிறந்தநின வாழ்த்துக்கள்
5-15 வயலின்—
பி. வைத்தியநாத சர்மா
5-45 திரைக்குரல்†
6-00 செய்திகள்
6-10 வாத்ய இசை
6-30 பாட்டு—
கே. தங்கராசா
7-00 மாதர் கேட்டவை†
7-30 பாட்டு—
ஏ. சோமசுந்தரம்
8-00 முஸ்லிம் நிகழ்ச்சி—
மணிமொழிகள்—மவுலவி
எம். ஜே. கலீலுர் ரஹ்மான்
8-15 மாணவர் மன்றம்—தெமட்டகொடை
மதரஸதுல் கைரியா பெண்கள் பாடசாலை
8-30 நேயர் கேட்டவை—
9-00 செய்திகள்
9-10 அறிவிப்புகள்
9-15 நாடகம்—
**" துறவு "—**
எஸ். பொன்னுத்துரை எழுதியது
9-45 நிலைய ஒலிப்பதிவுகள்
10-15 இசையமுதம்
10-30 ஒலிபரப்பு முடிவு

## யந்திர மீன்பிடிப் படகு

(1 ம் பக்கத் தொடர்)

எதிராகச் செய்யப்பட்டுள்ள சிபார்சுகள் பற்றி அவர்களுக்குத் தெரிவிக்கப்படுவதோடு இதர விண்ணப்பதாரர்களுக்கெதிரான ஆட்சேபனைகளைக் கிளப்புவதற்கும் வாய்ப்பளிக்கப்படும்.

ஒரு குறிப்பிட்ட பிரதேசத்துக்கு வழங்கப்படவிருக்கும் படகுகளின் எண்ணிக்கையைவிட தகுதியான விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை அதிகமாகக் காணப்படும் பட்சத்தில் தகுதியான விண்ணப்பதாரர்களிடையே திருவுளச்சீட்டுப் போடுவதன்மூலம் இறுதித்தெரிவு நடைபெறும். ஏற்கனவே யந்திரப் படகுகளில் மீன்பிடித்து அனுபவமுள்ளவர்ளுகக்குத் தகுதிக்கான சலுகை அளிக்கப்படும்.

## நாற்று நடுகையும் அதன் பயனும்

### சைவப் புலவர் ச. ஏ. பாலசுப்பிரமனியம்

(சென்ற வாரத் தொடர்)

முதலியன (எமது வட்டார வயலிலுள்ள வழிபடும் தெய்வம்) "முதற் கோணல் முற்றுங்கோணல் நீதான் துணை" என்றேன். ஆண்டவன்துணையும் "என் என்னும் முன் எண்ணெய்யாக" நின்ற நமது போதனாசிரியரும் அன்றி வேறுதுணையில்லை. எனக்கே இவ்வளவு இன்னலானால் பலரிடையேயும் சென்று போதிக்கும் நமது போதனாசிரியருக்கு ஏற்பட்ட இன்னல்கள் எத்தனை எத்தனையோ ?

சென்றவருடம் "முழுக் காணியையும் நாற்றுப் போட்டு நட்டுப்போடுங்கோ" என்றாள் மனைவி. முதல் வருடம் நாற்று நட்ட படியால் வீட்டிலே இருக்கமுடியவில்லை. இவ்வருடம் நடாவிட்டால் இருக்க முடியாது என்ற நிலை வந்து விட்டது. ஆண்டவனின் அருட்பலத்தினாலே இந்த இரு வேறுமன நிலையை உண்டாக்கியது மட்டுமல்லாமல் சீர் திருத்த விவசாயி என்று எனது கிராம மக்கள் கருதும் படிக்கு என்னை ஆக்கி மேலும் ஊக்குவிக்கும் நமது போதானாசிரியரும் மூளாய் வாசியுமான திரு. அ. சோமசுந்தரம் அவர்களுக்கு எனது சார்பாகவும் எனது மனைவிமக்கள் சார்பாகவும் எனது கிராம மக்கள் சார்பாகவும் நன்றி கூறுகிறேன். ஒரு விஷயம் கூற மறந்துவிட்டேன். "காணிக்குள் இனி இறங்காதே" என்ற நம் பெரியவர். விளைவுகண்ட தன்காணியைப் பார்த்துச் சொல்லுகிறார். "கட்டு முக்கலம் காணும் கதிர் உழக்கு நெல் காணும்" என்று; எப்படி விளைவு கணக்கு.

இவ்வருடம் எனது மகன் உமாபதி எனது உதவியுடன் யப்பானிய முறைப்படி 200 சதுர யார் நிலத்தில் நெல் விளைவித்தார். அதிலே 362 நெல் மணிகளைக் கொண்ட கதிர் ஒன்று காணப்பட்டது. மழையின்மை காரணமாய்ப் பதராய்விட்டன சில நென்மணிகள்.

சகோதரர்களே ! கண்ணின் மணியனைய செல்வச்சிறுவர்களே !

" யானை முட்டுந்தாள்
வானைமுட்டும்போர் " கட்டி,

" செந்நெல் விளைத்தெடுத்து
தீங்கரும் பைச்சாறுக்கி
கன்னல் தமிழ் குழைத்து
கன்னியர்கள் இசைபாட வாரி வழங்கியுண்டு

காதலராய்க் " களிநடம் புரிந்தவர் நம் தமிழர். சற்றுச் சிந்தியுங்கள். நாற்று நடுகை முறை உழவுமுறை எருவிடும் முறை களைக்கட்டும் முறை, பயிரூட்டுச் செய்கை செய்யும் முறை, நிறுத்தும் முறை, விளைவு கணக்கிடும்முறை ஆகியவற்றைக் கண்டவர்கள் பண்டைத் தமிழ் மக்கள். எங்கே அரசாங்கத்தாருடன் சேர்ந்து ஒரு முறை என் பலமுறை கூவுங்கள் பார்க்கலாம். "யாப்பானிய முறையில் நாற்றுநட்டு அமோகமான விளைச்சலைப் பெறுங்கள்". நிரம்பச்சந்தோஷம் "ஆர் குத்தியும் அரிசியாகட்டும்".

இலங்கை, வாழைச்சேனை எம்பேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனுல் உற்பத்திசெய்யப்பட்ட காகிதத்தில் இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

ஆர் 12037—5,007 (9/63)